இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023


# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 121 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 25 – திங்கள்கிழமை 11 டிசம்பர் 2023 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 121: Thiruvalluvar Year - 2054 - Karthigai 25 - Monday 11 December 2023 - Dak 8 Pages ₹ 5.00

# இலட்சியக் கொடி ஏந்தி இளம் பிறைகளின் அணிவகுப்பு!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.24 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

## கலைஞர் கடிதம்

**உடன்பிறப்பே,**

1949ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் தேதியன்று, தி.மு. கழகத்தின் தொடக்க விழாக் கூட்டம் சென்னையிலே நடைபெற்றதென்றாலும், அதே ஆண்டு அக்டோபர் 17ஆம் நாள்தான், தமிழ் நாடெங்கும் கழக அமைப்புகளின் தொடக்க விழாப் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. அதே நாளில் நெல்லை மாவட்டத்திலே தி.மு.கழகத்தை தொடங்கிடும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பொறுப்பு, அண்ணா அவர்களால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டு, கோயில்பட்டியிலும், தூத்துக்குடியிலும் நடைபெற்ற கூட்டங்களில் கலந்து கொண்டேன்.

தூத்துக்குடி என்றதும் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாரின் நினைவும், அவர் இழுத்த செக்கு, தமிழகத்தின் எங்கோவொரு மூலையில் கவனிப்பாரற்று கிடந்ததைக் கண்ட நான், கழக ஆட்சி மலர்ந்ததும் உடனடியாக அதனைத் தமிழகத்தின் தலைநகருக்குக் கொண்டு வந்து, அனைவரும் பார்க்கத் தக்க வகையில் அமைத்த நினைவும் என் நெஞ்சில் நிழலாடுவதைப் போல, கழகக் காளை கே.வி.கே. சாமியின் நினைவும் நெஞ்சிலே பீறிட்டு எழத்தான் செய்யும். தொண்டாற்றுவதற்கென்றே பிறந்த தம்பிதான் கே.வி.கே. சாமி. நான் அடிக்கடி கூறுவேனே, தன்னால் கட்சிக்கு என்ன இலாபம் என்று பாடுபடுகிறவன்தான் கட்சியின் இரத்த நாளம், கட்சியால் தனக்கென்ன இலாபம் என்று நினைப்பவன் புற்றுநோய்க்கு சமமானவன் என்று - அதிலே இரத்த நாளமாக செயல்பட்ட அரிமா நெஞ்சினன் தான் கே.வி.கே. சாமி.

கே.வி.கே. சாமியை சந்திக்கும் போதெல்லாம் அண்ணா அவர்கள், "எங்கும் தனியாகப் போகாதே, எப்போதும் பத்து நண்பர்களுடன் இரு" என்று சொல்வார்கள். ஆனால் அண்ணா பயந்தவாறே, தூத்துக்குடியில் கழக அலுவலகத்தில் கழகத் தோழர்களிடம் பேசிக்கொண்டிருந்து விட்டு, வீட்டிற்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த தம்பி சாமியை, எதிரிகள் சூழ்ந்து கொண்டார்கள். இருட்டில் எப்படி செல்வதென்று திகைத்த நிலையில் இருந்தவரை, பாவிகள் கத்திகளாலும், கட்டாரிகளாலும் கொன்று குவித்தனர். மறைந்த அந்த மாவீரனின் உழைப்பும், அவர் ஆற்றிய தொண்டும், அவர் கொண்ட கொள்கை உறுதியும் அவருக்குப் பின் அந்த தூத்துக்குடி நகரிலே பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்களை உருவாக்கிட துணை புரிந்தது.

தந்தை பெரியார் அவர்களால், "திராவிடத் தளபதி" என்று பெருமிதம் பொங்கிட அழைக்கப்பட்ட கே.வி.கே. சாமி 20.9.1956 அன்று கொலையுண்ட நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து நீண்டதோர் கவிதையினை நான் எழுதி ஆறுதல் பெற்றேன். "தென் பாண்டி கடல் முத்தே! தீர்ந்ததோ உந்தன் வாழ்வு" என்று முரசொலியில் கடிதத்திற்கு தலைப்பிட்டு இரங்கல் கட்டுரை தீட்டியிருந்தேன். அத்தகைய மாவீரர்கள் உலவிய பூமியிலே தான் இளைஞர் அணியின் மாநில மாநாடு நடைபெறவுள்ளது.

18.2.1965! இது ஒரு நாள் என்பதுதான் அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்த நாளில் தான், கட்டாய இந்தி ஆதிக்கத்தை எதிர்த்த குற்றத்திற்காக சென்னையிலே கைது செய்யப்பட்டு, நெஞ்சுவலியோடு லாரியிலே ஏற்றி அழைத்துச் செல்லப்பட்டு நெல்லைச் சீமையிலே உள்ள பாளையங்கோட்டை சிறைச்சாலையிலே தனிமை சிறைக் கைதியாக அடைக்கப்பட்டேன்.

1965, பிப்ரவரி திங்களிலே பாளைச் சிறைக்குள் நுழைந்த நான், ஏப்ரல் திங்கள் முதல் வாரத்தில் தான் விடுதலை செய்யப்பட்டேன். அந்தப் பாளை சிறைச்சாலை உள்ள சீமையிலேதான் தற்போது, தி.மு.கழகத்தின் மாநில இளைஞர் அணி சார்பாக மாநாடு நடைபெறவுள்ளது. அந்தப் பாளைச் சிறையிலே நான் அடைபட்டிருந்த போது, பேரறிஞர் அண்ணா அவர்கள், நேரில் சிறைச்சாலைக்கு வந்து என்னைப் பார்த்து, அது பற்றி அங்கே நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் பின்னர், காஞ்சி இதழிலும் உருக்கமாக எழுதியிருந்தார்கள். "தன்னை வெல்வான், தரணியை வெல்வான்" என்று சிறைச்சாலையிலே உள்ள வாசகத்திற்கான விரிவுரை, தெளிவுரை அண்ணாவின் வாக்கிலிருந்து உருவானது என்பது அந்த நெல்லைச் சீமையிலேதான்!

அந்தச் சிறைச்சாலைக்கு என்று சில வரலாற்றுப் பெருமைகள் உண்டு. அந்தப் பாளையங்கோட்டை சிறைச்சாலையிலேதான் வெள்ளையருக்கு எதிராக வீரமுழக்கம் எழுப்பிய கட்டபொம்மனின் உடன்பிறப்பு ஊமைத்துரையும், தளபதி சுந்தரலிங்கமும், அவரது தோழர்களும் அடைக்கப்பட்டிருந்தார்கள்.

தங்கத் தரணி என்று பெயர் பெற்ற வங்க மண்ணிலே விடுதலை இயக்கம் வேர்விட்டு வளர்ந்திட உழைத்த மாவீரர்களில் முதன்மை வீரராகத் திகழ்ந்த தேசபந்து சித்தரஞ்சன் தாஸ், ஒரு காலத்தில் அடைக்கப்பட்டிருந்ததும் இந்தப் பாளையங்கோட்டை சிறைச்சாலையிலேதான்!

1953ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் கல்லக்குடியில் நடைபெற்ற ரயில் நிறுத்தப் போராட்டத்தில் நான் கலந்து கொண்டபோது, நெல்லைச் சீமையிலும் ரெயில் நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்திற்கு முதல் நாளே கே.வி.கே. சாமி, செல்லசாமி, ரத்தினம் ஆகியோர் காவலில் வைக்கப்பட்டு விட்டனர். எனினும், எம்.எஸ். சிவசாமி மற்றும் 26 பேர் ரெயில் மறியல் செய்து கைதாகினர்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

---

### 'மிக்ஜாம்' புயல் மழையினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில்

# பள்ளிகளின் தூய்மைப் பணிக்காக ரூ.1 கோடியே 90 லட்சம் ஒதுக்கீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!



**சென்னை, டிச. 11 -**

**மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட வரலாறு காணாத பெருமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகளின் தூய்மைப் பணிக்காக ஒரு கோடியே 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

'மிக்ஜாம்' புயலால் ஏற்பட்ட வரலாறு காணாத பெருமழையின் காரணமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் மாணவர்களின் நலன் கருதி, தமிழ்நாடு அரசால் பள்ளிகளுக்கு 04.12.2023 முதல் 09.12.2023 வரை விடுமுறை அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுரைகளின்படி, 'மிக்ஜாம்' புயல் மழையினால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளி வளாகங்களை சுத்தம் செய்து, இன்று (11.12.2023 – திங்கட்கிழமை) பள்ளி திறக்கும் நாளில் நல்ல கற்றல் சூழலை உருவாக்கும் விதமாக பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இவற்றைக் கண்காணிக்க பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த 17 அதிகாரிகள் 4 மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இப்பணிகளுக்காக சென்னை, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கு தலா 50 இலட்சம் ரூபாயும், காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு 40 இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம் ஒரு கோடியே 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள்!

இம்மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் தங்களது பாடப் புத்தகம் மற்றும் நோட்டுப்புத்தகம் உள்ளிட்ட உடைமைகளை இழந்த மாணவர்களுக்கு, பள்ளிகள் திறந்தவுடன் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சீருடை மற்றும் புத்தகப்பை போன்ற பொருட்களை வழங்க இன்று (திங்கள்கிழமை 11.12.2023) மாணவர்களின் தேவைகளைக் கண்டறிந்து, செவ்வாய்க்கிழமை 12.12.2023 அன்று பாடப்புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம் உள்ளிட்டவை வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

### அறையாண்டு தேர்வுகள் ஒத்தி வைப்பு!

மேலும், ஏற்கெனவே, இன்று (11.12.2023) அரையாண்டுத் தேர்வுகள் தொடங்க இருந்த நிலையில், புத்தகங்கள் இல்லாமல் மாணவர்கள் தேர்வுக்கு படித்து தயாராக முடியாது என்ற நிலையினை கருத்தில் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் இன்று திங்கள்கிழமை (11.12.2023) தொடங்கவிருக்கும் தேர்வுகளை புதன்கிழமை (13.12.2023) அன்று தொடங்க வேண்டுமென பள்ளிக் கல்வித் துறைக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. பள்ளிக் கல்வித் துறையால் அரையாண்டுத் தேர்வுகளுக்கான புதிய கால அட்டவணையை வெளியிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

---

### சேதமடைந்த அரசு சான்றிதழ்கள் - பள்ளிக் கல்லூரி சான்றிதழ்கள்

# சிறப்பு முகாம் மூலம் கட்டணமின்றி வழங்க நடவடிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, டிச. 11 -**

**"மிக்ஜாம்" புயல், வெள்ள பாதிப்பினால் சேதமடைந்த அரசு சான்றிதழ்கள், பள்ளிகல்லூரி சான்றிதழ்களை பொது மக்கள் மற்றும் மாணவர்களுக்குக் கட்டணமின்றி வழங்கிட சிறப்பு முகாம்கள் மூலம் வழங்கிட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

தமிழ்நாட்டில் "மிக்ஜாம்" புயல் காரணமாக சென்னை மாவட்டத்திலும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் வரலாறு காணாத மழைப் பொழிவு ஏற்பட்டு, கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு அரசால் பல்வேறு மீட்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மழை, வெள்ள பாதிப்பினால் குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, பிறப்புச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வாரிசு சான்றிதழ், பள்ளி, கல்லூரிச் சான்றிதழ்கள் உள்ளிட்ட அரசு ஆவணங்களை இழந்தவர்கள், அவற்றை மீண்டும் பெறும் வகையில், அதற்கென சிறப்பு முகாம்களை நடத்தி, பொது மக்களுக்கு கட்டணமின்றி அதனை வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட வருவாய் வட்டங்களில், குறுவட்ட அளவிலான சிறப்பு முகாம்கள் இன்று (11-12-2023 – திங்கட்கிழமை), சென்னை மாவட்டத்தில், சென்னை மாநகராட்சியின் கோட்ட அலுவலகங்களில் நாளையும் (12.12.2023 செவ்வாய்க்கிழமை) அன்றும் தொடங்கப்படும்.

சிறப்பு முகாம்கள் நடைபெறும் இடம் மற்றும் நேரம் குறித்த அறிவிப்பு தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்கள் மூலம் அறிவிக்கப்படும். மேற்படி சிறப்பு முகாம்களில், பொதுமக்களின் வசதிக்கென, இசேவை மையங்களும் செயல்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

### புயல் சேதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட

# ஒன்றிய அரசின் குழு இன்று சென்னை வருகை!

*புதுடெல்லி, டிச.11 -*

மிக்ஜாம் புயலால், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் பாதிப்பு ஏற்பட்டது. இந்த பாதிப்பை தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசுக்கு வலியுறுத்தினார். மேலும், புயல் வெள்ள நிவாரணத்திற்காக 5 ஆயிரத்து 60 கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதனைத்தொடர்ந்து, சென்னை வருகை தந்த பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், புயல், மழை, வெள்ள பாதிப்புகளை ஹெலிகாப்டரில் சென்று பார்வையிட்டார். பின்னர், முதலமைச்சருடன் ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில், புயல் பாதித்த பகுதிகளை ஆய்வு செய்ய மத்தியக்குழு இன்று (திங்கட்கிழமை) சென்னை வரவுள்ளது. புயல் பாதித்த பகுதிகளை 2 நாட்கள் ஆய்வு செய்யும் அக்குழு, செவ்வாய்க்கிழமையன்று, தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளருடன் ஆலோசனை நடத்திவிட்டு, டெல்லி செல்லவுள்ளது.